## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**சுற்றறிக்கை**

முனைவர் கு. **சின்னப்பன்**
பதிவாளர் (பொ)

நிதி 8 / வ.வரி / 2019 - 20 / நாள்:02.01.2020

பொருள்: 2019-20 நிதியாண்டு - வருமானவரி - படிவம் அளித்தல் - தொடர்பாக.

---------

2019-20 ஆம் ஆண்டிற்கு உத்தேச வருமானவரி தோராயமாகக் கணக்கிட்டு திங்கள் தோறும் அவரவர் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருமானவரித்துறைக் கணக்கில் வரி செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்துவரும் அனைத்து கல்விநிலை மற்றும் அலுவல்நிலைப் பணியாளர்கள் வருமானவரிச்சட்டம் 1961 பிரிவு 192ன்படி 2019-20ஆம் நிதியாண்டிற்கான இறுதி வருமானவரி அறிக்கையின் ஒரு படியை 14.01.2020க்குள் நிதி அலுவலருக்கு நேரிடையாகக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். அவ்வாறு அனுப்பிவைக்கப்பெறாத இனங்களில் பல்கலைக்கழக ஆவணங்களின் அடிப்படையில் கணக்கிட்டு வருமானவரி பிடித்தம் செய்யப்படும். இதர வருமானங்கள் தங்களால் தெரிவிக்கப்படாமல் இருந்தால் அதற்குப் பல்கலைக்கழகம் பொறுப்பாகாது.

தங்களது அறிக்கையில் நடப்பு நிதியாண்டில் வருமானவரி விதிப்படி மார்ச் 2019 ஊதியம் முதல் பிப்ரவரி 2020 வரையிலான ஊதியம், மதிப்பூதியம், தொலைநிலைக்கல்வி இயக்ககம் மற்றும் தேர்வுகள் பிரிவிலிருந்து பெறும் மதிப்பூதியம், வெகுமதித்தொகை மற்றும் ரூ.10,000/-க்கு மேற்பட்ட வங்கி வட்டித்தொகை ஆகியவற்றை உட்படுத்தி கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பிற நிறுவனங்களிலிருந்தும் தங்களால் பெறப்பட்ட அனைத்து வருமானங்களும் கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இதில் ஏதேனும் விடுதல்கள் இருப்பின் அதற்கான முழுப்பொறுப்பும் தங்களையே சாரும். வருமானவரி அறிக்கையில் ஊதியப்பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் இனங்கள் தவிர்த்து இதர இனங்களுக்கு வரிச்சலுகை கோரப்படுபவைகளுக்கு உரிய அசல் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும். ஆவணங்கள் அளிக்கப்படாத இனங்களில் வரிச்சலுகை ஏற்கப்படமாட்டாது.

வருமானவரி அறிக்கையில் வருமானவரி நிரந்தரக் கணக்கு எண் (PAN)-ஐயும், தங்களது கைபேசி எண்ணையும் தவறாது குறிப்பிடப்படவேண்டும். நிரந்தரக் கணக்கு எண் இல்லாதவர்கள் புதிய எண் பெற்று வருமானவரி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். 2019-20ஆம் ஆண்டு வருமானவரி கணக்கிடும் படிவம் தமிழ்ப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (tamiluniversity.ac.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனைப் பதிவிறக்கம் செய்து முழுமித்து நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டையின் நகலினை வருமானவரி படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பதிவாளர் (பொ) 2/1/2020

பெறுநர்

அனைத்து கல்விநிலைப் பணியாளர்கள் மற்றும் அலுவல்நிலைப் பணியாளர்கள்

2-1-2020 2/1/2020

நகல்

துணைவேந்தர் செயலகம்
பதிவாளர் பிரிவு
மக்கள் தொடர்புப் பிரிவு